1974 சனவரி 23]

* *98* **வினா—திரு. கோ. இளங்கோவன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

பூதலூர் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் இருக்கும் செங்கிப்பட்டி மருந்தகத்தை அரசின் நேரடி நிர்வாகத்தில் கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : *தற்போது இல்லை.*

பாதாள சாக்கடை அமைப்புத் திட்டங்கள்

* *99* **வினா—திரு. என். கிட்டப்பா:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—*

(அ) 1972-73 ஆம் ஆண்டில் எந்தெந்த நகராட்சி மன்றங்கள் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டங்களுக்கென அரசிடம் கடன் கோரியுள்ளன ?

(இ) எந்தெந்த நகராட்சி மன்றங்களுக்குக் கடன் அனுமதிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: *(அ)* **&** *(இ) 8 நகராட்சி மன்றங்கள் 1972-73 ஆம் ஆண்டில் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டங்களுக்கென அரசிடம் கடன் கேட்டன. அரசு இந்த 8 நகராட்சி மன்றங்களுக்கும் 1972-73 ஆம் ஆண்டிற்கு கடன் தொகை வழங்கியுள்ளது. நகராட்சி மன்றங்களின் பெயர்களும் கடன் வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு :—*

		ரூபாய்.
1.	பெரியகுளம்	*1,85,000*
2.	மன்னார்குடி	*17,800*
3.	திருநெல்வேலி	*10,84,000*
4.	கும்பகோணம்	*1,30,600*
5.	காஞ்சீபுரம்	*6,61,000*
6.	கோயம்புத்தூர்	*3,62,000*
7.	திருச்சி	*6,87,000*
8.	திருவொற்றியூர்	*3,51,000*

திரு. என். டென்னிஸ்: எந்த அடிப்படையில் இந்த முனிசிபாலிடிகளுக்கு இது தரப்படுகிறது? மாவட்ட அடிப்படையில் இந்த லோன் தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாவட்ட அடிப்படையில் ஒதுக்குவது என்பதெல்லாம் தேவைகளை நிறைவு செய்வதற்கு வாயில்களை தெளிவாக்குவதற்கு உகந்தது அல்ல. மாறாக, ஒரு நகர சபை, நகரசபைத் தலைவர், உறுப்பினர்கள் தங்களுடைய தேவைகளை, திட்டத்தின் அவசியத்தை எடுத்துச் சொல்கிறார்கள். இந்தத் திட்டங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மொத்த செலவு எவ்வளவு என்பது ஆய்வு செய்யப்படுகிறது. நிறைவேற்றுவதற்கு ஆகிற காலம், 8 ஆண்டு காலம், 4 ஆண்டு காலம் என்று தீர்மானிக்கப்படுகிறது. ஆண்டுக்கு இவ்வளவு தொகை தேவை, எவ்வளவு கடன் பெறுவது என்பது ஆலோசிக்கப்பட்டு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம் கடன் கேட்கப்படுகிறது. அந்தக் கடனை வைத்து நிறைவேற்றப்பட்ட திட்டத்தை பயன்படுத்தி நகர மக்கள் திருப்பிக் கட்டுகின்ற வாயில்களும் ஆராயப்படுகின்றன. இப்படி பல்வேறு கட்டங்களில் ஆராயப்படுகிறது. ஆகவே, மாவட்ட அடிப்படை அல்லது வட்டார அடிப்படை என்பது அவசியமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற பொழுது மன்னார்குடி நகராட்சிக்கு ரூ. 17,800 என்று சொன்னார்கள். ரூ. 17,800 மன்னார்குடி நகராட்சி கேட்டார்களா? அரசாங்கம் ரூ. 17,800 மட்டும் ஒதுக்கினார்களா? அது அந்தத் திட்டத்திற்குப் போதுமானதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு கடன் கொடுக்கிறபொழுதும், இந்தத் திட்டங்கள் 1, 2, 3 என்று படிப்படியாக நிறைவேற்றப்படுகின்றன. ஏற்கனவே திட்டம் நிறைவேற்றி மிச்சம் ரூ. 17,800 தேவை என்றால் அதைத் தான் கொடுப்பார்கள். அதிகக் கடன் கேட்கவில்லை என்று அங்கத்தினர் அவர்கள் குறைபட்டுக்கொள்ளக் கூடாது.

திரு. என். மருதாசலம்: கோவை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் இன்னும் பூர்த்தி ஆகவில்லையே? கோவை நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக அரசினிடம் கடன் கேட்டுள்ளார்களா?

1974 சனவரி 23]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஏற்கனவே தரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட கடன் தொகை ரூ. 3,62,000 பாதாள சாக்கடைத் திட்டத்திற்காகத் தரப்பட்டுள்ளது. ஆனல், சில மாவட்டங்களில் குறைவு என்ருல், அதை நிறைவேற்றும் பொழுது மேலும் கடன் தேவையானல், அவர்கள் கேட்பார்கள். முறைப்படி வழங்கப்படும்.

*100. விஞ—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்திற்கென பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) திருச்சி நகரத்திற்கான பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் 25—5—1970-ல் அளிக்கப்பட்டு, வேலைகள் படிப்படியாக நடைபெறுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: திருச்சி நகரத்தின் பாதாள சாக்கடை திட்டத்திற்கு எவ்வளவு செலவு செய்வதாக திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மொத்த செலவு ரூ. 2,85,06,000 என்று போடப்பட்டிருக்கிறது. ஒரு ஆண்டுக்கு குறிப்பிடப்பட்டுள்ள செலவு ரூ. 7,57,000 என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அரசாங்கம் இதற்கு ஏதாவது மானியம் வழங்கியிருக்கிறதா அல்லது இனிமேல் வழங்குவது குறித்து ஆலோசனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தனியாக ஒரு நகரசபைக்கு மானியம் வழங்குவது என்பது இயலாத காரியம். கடன் வழங்கு வதற்கான திட்டம். முழு அளவிற்கு கடன் தொகை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதே ஒரு பெரிய முயற்சி.